# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2007 - 2008
## தமிழ்மொழி - ஆண்டு 10

**1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

*நோக்கம்:* பாடநூல் அடைவையும் உன்னிப்பு ஆற்றலையும் அளவிடல்.

*புள்ளி :* - சரியான விடைக்குக் கூட்டினுள் புள்ளடியிட்டால் மட்டுமே சரி.
- புள்ளடியிடாமல் கோடிடப்பட்ட விடைக்குப் புள்ளியில்லை.

**விடை:**

1. அ) கழகஇலக்கியங்கள்
2.இ) செவ்வழி
3. இ) ஆட
4. அ) சேரன்செங்குட்டுவன்
5. இ) காசிஆனந்தன்
6. அ) குமரிக்கண்டம்
7. இ) நாவலந்தீவு
8. ஈ) பஃறுளி, குமரி
9. ஆ) வேங்கை
10. அ) க்ச்த்ந்ப்ம்
11. ஆ) வெண்டாமரை
12. ஆ) இரட்டைமேற்கோட்குறி
13. அ) அகநானூறு
14. இ) தெற்கு + தமிழ்
15. ஈ) கார்முகிலை
16.இ) அழகென்பாளை
17. அ) 217
18. ஆ) இந்து மாவாரி
19. ஈ) காதல்
20. ஆ) முகமதி

**2) கீழே தரப்பட்டுள்ள இலக்கண வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நோக்கம்: இலக்கண மொழியியல் அடைவை வெளிப்படுத்தும் ஆற்றலை அளவிடல்.

புள்ளி :
- தெளிவான வெளிப்பாட்டு விடைகளுக்கு முழுப்புள்ளி.
- விடை தெரிந்தும் வெளிப்படுத்தலில் தெளிவின்மை காணின் 1புள்ளி மட்டும்.
- எழுத்துப்பிழை கவனிக்கப்பட வேண்டும்.

விடை: 1. நெடிற்றொடர் குற்றியலுகரம் **தோடு, காசு**
ஆய்தத்தொடர் குற்றியலுகரம் **எ.ஃ.கு**
வன்றொடர்க் குற்றியலுகரம் **பாக்கு, உப்பு**

2. செப்புவாக்கியம், வினாவாக்கியம்,
விருப்பு வாக்கியம், வியப்பு வாக்கியம்,

3.

**பொருட்பெயர்: மரம்**
**இடப்பெயர்: வீடு**
**காலப்பெயர்: மாசி, வியாழன்**
**சினைப்பெயர் : வாய், கிளை**
**குணப்பெயர் : வெண்மை, இனிமை**
**தொழிற்பெயர்: நடத்தல், உறங்கல்**

4. **தெரிநிலைவினை** : வரைந்தான்
செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறையும் தெரிநிலைவினை வெளிப்படையாகக் காட்டி நிற்கும்.

**குறிப்புவினை: தம்பி நல்லவன்**
செய்பவரை அல்லது அதற்குரியவரைக் காட்டி நிற்பது. இது காலம் காட்டாது.

5. க் → ங்
ச் → ஞ் ட் → ண் த் → ந்
ப் → ம்
ற் → ன்

6. அ → அது அந்த
இ → இது இந்த
உ → உது உந்த

7. தேனிசை = தேன்+இசை

உவமானம் - தேன்

உவமேயம் - இசை

பொதுத்தன்மை - இனிமை

*8. விகாரப்புணர்ச்சி 3 வகைப்படும்.*

*அவையாவன :*

| | | | | |
|---|---|---|---|---|
| *தோன்றல்* | - | *வாழை* | + *பழம்* | = *வாழைப்பழம்* |
| *திரிதல்* | - | *நெல்* | + *பயிர்* | = *நெற்பயிர்* |
| *கெடுதல்* | - | *மரம்* | + *வேர்* | = *மரவேர்* |

9. வினாவெழுத்துகள் ஐந்து வகைப்படும்.

ஆ- அவனா வந்தான்?

ஓ- அவன் படித்தானோ?

எ - எவன் வந்தான்?

ஏ- ஏன் வந்தான்?

யா - யார் வந்தான்?

10. உவமையணி: தேன் மொழி போன்ற மொழி
உருவக அணி: புயக்குன்று மார்பாகிய மலை

ஒருவர் தான் எடுத்துக் கொண்ட பொருளை விளக்குவதற்கு வேறொரு பொருளை ஒப்பிட்டுக் காட்டுவது.

**எப்பொழுதும் உவமானம் முன்னும் உவமேயம் பின்னும் வரும்.**
**உருவக அணி: உவமேயம் முன்னும் உவமானம் பின்னும்வரும்.**

3) **தரப்பட்டுள்ள மொழியியல் வினாக்களில் ஐந்துக்கு மட்டும் முழுவிடை தருக.**

அடிமைத்தளை: அடிமைத்தளையை உடைத்து இறமையுடன் வாழ்வதற்கு உலகெங்கும் இனவாதிக்கத்துக்கெதிரான போராட்டம் நடைபெறுகிறது.
கணீர்கணீர்: கோவில் மணியோசை கணீர் கணீர் எனக் கேட்டது.

2. கீழ்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.
அரையம்: பேரரசு
விறலியர்: கூத்தாடும்மங்கையர்
எழினி: திரைச்சேலை
ஆலல்: அதிர்ந்தாடல்
கணை: அம்பு

3. எதிர்ப்பாற் சொற்கள் தருக.
பாணன்: பாடினி
பெண்மை: ஆண்மை
உழவன்: உழத்தி
இறைவி: இறைவன்
சிற்றன்னை: சிற்றப்பன்

4. தரப்பட்டுள்ள பகுசொற்களைப் பகுத்து எழுதுக.
கண்ணன்: கண்+ண்+அன்
நடந்தனன்: நடத்(ந்)த+அன்+அன்

5. அள்ளியிறைத்தல், அடம்பிடித்தல்

6. இளமையிற் கல்வி விலையிலெழுத்து.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

7. இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்

4) கீழ்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழு..

நோக்கம்: *செய்யுள் காட்சியைக் கண்டுணர்ந்து வினாக்களுக்கு விடையிறுக்கும் ஆற்றலை அளவிடல்.*

புள்ளி : *- ஒரு சொல் விடைக்குப் புள்ளியில்லை.*
*எழுத்துப்பிழை இருப்பின் ஒவ்வொரு விடைக்கும் 0..5 புள்ளி கழிக்கவேண்டும்.*

**விடை:**

1. மருதநிலததிற்குரிய காட்சி இப்பாடலில் புனைந்து காட்டப்பட்டுள்ளது.
2. மகரயாழின் இசையை வண்டுகள் பாடுகின்றன.
3. இந்நாடக அரங்கத்துக்கு திரைச்சீலையாக அலைகள் அமைகின்றன.
4. இந்த ஆடலரங்கின் பார்வையாளர்கள் குவளை மலர்கள்.
5. பொருள் தருக.
   கொண்டல்: கீழ்த்திசைக் கார்முகில்
   எழினி: திரைச்சீலை
   மகரம்: மீன்
   தெண்டிரை: தெளிந்த நீரலை

5) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்கள் ஏழில் எவையேனும் ஐந்துக்கு முழுவிடைதருக.

நோக்கம்: *பாடநூற்றரவுகளை மனத்திருத்தும் சார்பாற்றலைத் தெரிவினூடாக அளவிடல்.*

புள்ளி : *- சொற்றொடருக்கு 1 புள்ளி.*
*- வாக்கிய விடைக்கு 2 புள்ளிகள்.*
*- ஒரு சொல் விடைக்குப் புள்ளியில்லை.*

**விடை:**

1. தொகைநூல்கள் என்பதிலிருந்து அவை தொகுக்கப்பட்ட நூல்கள் என்பது தெரிகிறது.
2. தும்பிகள் காலைப்பண்ணான செவ்வழிப்பண்ணை இசைக்கின்ற காலைக்காட்சி தரும் சோலை.
3. கனகவிசயனை வென்று அவர்தலையில் கல்கொண்டு வரத்தவறின் பகையரசர்களிடமிருந்து அச்சமின்றி மக்களைக்காப்பாற்றாத கொடுங்கோல் மன்னன் என என்னை உலகம் இகழட்டும் என்பது.
4. நாவலந்தீவு
5.
6. குமரிக்கண்டம்.
7. குமரிக்கண்டம் அழியப் போவதை முன்கூட்டியே உணர்ந்து கொண்ட தமிழர் வடபுலம் நோக்கி நகர்ந்தனர். இக்கரணியத்தால் சிந்துவெளி சுமேரிய நாகரிகங்கள் தோன்றின.

**6) தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிடமொழியில் மொழிமாற்றுச் செய்க.**

*புள்ளி : - நேரடியான மொழிமாற்றத்தை எதிர்பார்க்க வேண்டாம். - உட்கருத்து இருந்தால்சரி.- முழுமையான கருத்தோட்டமுள்ள வாக்கிய உறுப்புக்கு முழுப்புள்ளி வழங்குக.*
*- எழுத்துப் பிழையைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.*

**7)**

**தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவி டை தருக**

**நோக்கம்: உரைத் தொகுதியை வாசித்து விளங்குதலை அளவிடல்.**

**புள்ளி: முழுமையான வாக்கியத்திற்கு முழுப்புள்ளி.**
**சொல் சொற்றொடர் 1 புள்ளி.**
**பார்த்தெழுதப்பட்ட விடைக்கு புள்ளியில்லை.**
**எழுத்துப்பிழை இருப்பின் ஒரு புள்ளி கழித்தல்.**

விடை:

1. **தமிழரின் புலப்பெயர்வு விடுதலைப்போருக்கான பொருள் வளத்தைத் திரட்டவும், போரின் நியாயத்தை உலகமக்களிடம் பரப்புரை செய்யவும்.**

2. **வீழ்த்தப்பட்டவர்கள் எழுவதற்கு ஏதுவான கல்வியும் பொருளும் வழங் கியது புலப்பெயர்வு.**
3. **குமுகாயத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் ஏற்றத்தாழ்வுநிலையை புலம்பெயர்ந்த வாழ்வில் கிடைத்த பொருளும்கலவியும் உடைத்தது இது குமுகாய நலம் வாய்ந்ததொரு தாக்கமாகும்.**
4. **புலப்பெயர்வு என்பது ஒரு குமுகாயம் தான் வாழ்ந்த நிலத்திலிருந்து தன் வாழ்வுரிமையைக் காப்பாற்றுவதற்காக இன்னொரு நிலத்திற்குக் குடிபெயர்தலாகும்.**

**குமுகச் சமநிலை: சமூக ஏற்றத்தாழ்வு.....**

7) **கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, ...........**

*நோக்கம்: சிந்தனை உருவாக்கத்தையும் பேச்சுத்திறனையும் கண்டறிதல். தனது எண்ணக்கருவை எழுத்தில் ஒழுங்குற வெளிப்படுத்தல்.*

*புள்ளி :*
- *முழுமையான கதையமைப்புள்ள வாக்கியங்களுக்கு முன்னுரிமை.*
- *முழுமையான கருத்தோட்டமுள்ள வாக்கிய இணைப்பிற்கு முன்னுரிமை.*
- *உறுப்பமைந்த வெறுமையான வாக்கியங்களுக்கு அரைவாசிப்புள்ளியும் அதற்குக் கீழும்.*
- *எழுத்துப்பிழை கவனிக்கப்பட வேண்டும்.*